**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.க.தர்ப்பகராஜ், இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.அ3/6209/2022** **நாள்: 07.05.2024.**

பொருள்: **பொதுப்பணி** – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட **அருண்** (திரு).ஞா என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

படிக்க:
01. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் எண்.ந.க.அ3/6209/2022 நாள்:19.09.2022.
02. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) செயல்முறைகள் எண். ந.க.அ3/6209/2022 நாள்:19.09.2022.
03. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ–1) துறை நாள்:08.03.2023.
04. மனித வள மேலாண்மைத் (G2) துறையின் கடித எண்.5532/G2/2023–1 நாள்:20.09.2023.
05. கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ஆ.கு.3/4600/2024 நாள்:20.02.2024

******

**ஆணை:–**

திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு, பொம்மிகுப்பம் கிராம உதவியாளராக பணிபுரிந்து பணியிடையே 04.02.2015 அன்று காலஞ்சென்ற **லேட்.ஞானசேகரன்** என்பவரின் மகன் **திரு.ஞா.அருண்** என்பவருக்கு பார்வை 1 (ம) 2–இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் **இளநிலை வருவாய் ஆய்வாளராக** பணிநியமனம் வழங்கப்பட்டது. அதன்படி தனியர் 10.10.2022 முற்பகல் ஆம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து தற்போது நாட்றம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் தனி வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை 3-இல் கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 4 (ம) 5-இல் கண்டுள்ள கடிதங்களில் காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கிய, பணி நியமன அலுவலரால் பணிவரன்முறை செய்திடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து **திரு.ஞா.அருண்** என்பவர் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் சேர்ந்த நாளான 10.10.2022 முப முதல் தமிழ்நாடு அமைச்சு பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தனியருக்கு தகுதிகாண் பருவம் துவக்கியும், மேலும் தனியரது தகுதிகாண் பருவம் மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

3) சம்மந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை சம்மந்தப்பட்ட அலுவலர் மேற்கொள்ள வேண்டியது.

ஒம்/-க.தர்ப்பகராஜ்.
மாவட்ட ஆட்சியர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

//உத்தரவுப்படி//

ப. [signature] 07/05/2024 (Y4)

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக
உதவியாளர்(பொது),
திருப்பத்தூர்.

பெறுநர்.
சம்மந்தப்பட்ட நபர். (நாட்றம்பள்ளி வட்டாட்சியர் மூலமாக).

நகல்: வட்டாட்சியர், நாட்றம்பள்ளி.
நகல் : "அ3" இருக்கைக்கு.